செ.வெ.எண்:08/2016 நாள்:06.09.2016

<u>பத்திரிகை செய்தி</u>

சிவகங்கை மாவட்டத்தில் உள்ள நகராட்சி மற்றும் தேர்வு நிலை பேரூராட்சிப் பகுதிகளில் விளம்பரப் பதாகைகள், சுலோக அட்டைகள், சுவர் விளம்பரங்கள், விளம்பரத் தட்டிகள் போன்றவை நிறுவுவதற்கு மாவட்ட ஆட்சியரின் அனுமதி பெறப்பட வேண்டும். விளம்பரம் செய்ய விரும்பும் நபர்கள் மேற்கண்ட வகையிலான விளம்பர சாதனங்கள் நிறுவப்படும் இடத்தின் உரிமையாளரிடம் மறுப்பின்மைச் சான்று பெற்றும், சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்பிடம் அதற்கான கட்டணத்தைச் செலுத்தியும், சம்பந்தப்பட்ட காவல் நிலைய அதிகாரியிடம் மறுப்பின்மைச் சான்று பெற்றும், விளம்பரத்தின் விபரம், மேற்கண்ட விளம்பரங்கள் நிறுவப்படும் இடத்தின் வரைபடத்துடன் (**TOPO SKETCH**), படிவம் 1-ல் விண்ணப்பம் மற்றும் அதன் இணைப்புப் படிவங்களை முழுமையாக விடுதலின்றி பூர்த்தி செய்து 15 நாட்களுக்கு முன்னர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மனுச் செய்ய வேண்டும் என மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.சு.மலர்விழி,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

::வெளியீடு::

செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,
சிவகங்கை.